DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.84/2024**

Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தீபக் கோவிந்தராஜ் | | : |
| த/பெ | : கோவிந்தராஜ் | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : தனியார் நிறுவன மேலாளர் |
| வட்டம் | : சென்னை | வயது | : 24/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 03.02.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>: PW1**

எங்கள் நிறுவனத்தின் பெயர் Shanazh bright steels industries pvt Ltd., அந்த நிறுவனத்தில் நான் மேலாளர் ஆவேன். இந்நிறுவனத்தின் உரிமையாளர் வழங்கிய அங்கீகரிப்பு கடிதம் மற்றும் அதிகாரத்தின் பேரில் இவ்வழக்கில் புகார்தாரராக சாட்சியளிக்கிறேன். எதற்காக பொது அதிகாரம் பெறப்பட்டது என்றால் எதிரி நிறுவனத்திற்கு பொருட்கள் Supply செய்தும் அதற்கான பணம் திருப்பி தர இரண்டு காசோலைகள் கொடுத்திருந்தார் அது திருப்பப்பட்டதால் காசோலை வழக்கு நடத்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. எதிரி வாங்கிய Steel Bar விவரம் குறித்து தெரியுமா என்றால் 41mm, 46mm Bright Bar வாங்கியுள்ளார். இதை தவிர வேறு அளவில் Bright Bar வாங்கியுள்ளாரா என்றால் SAE 1018 20Dia வாங்கியுள்ளார். வேறு அளவுள்ள Bright Bars வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்திற்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற வியாபார பரிவர்த்தனைக்கு பிறகு பொது அதிகாரம் வழங்கப்பட்டதா என்றால் பிறகு தான் அனைத்து பரிவர்த்தனைக்கும் பொது அதிகாரம் வழங்கப்பட்டது. நிறுவனத்தில்

பராமரித்து வரும் புத்தகத்தின் மூலம் பரிவர்த்தனை குறித்து தெரிந்து கொள்வேன். நான் தனிப்பட்ட முறையில் புத்தகம் எதுவும் பாராமரித்து வரவில்லை. எதிரிக்கும் எனக்கும் நேரடியாக வியாபார பரிவர்த்தனையில் தொடர்புள்ளதா என்றால் முதலாளியிடம் வியாபாரம் பேசப்படும் அதை குறித்து எனக்கு தெரியும். எதிரியை நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரியாது, காசோலை கொடுத்த பிறகு தான் தெரியும். எங்கள் நிறுவனத்திற்கு எதிரி நிறுவத்திற்கும் ஏற்பட்ட வியாபார பரிவர்த்தனை Credit மூலம் தான் நடந்தது. எங்களிடையே நடந்த பரிவர்த்தனைக்கு ஒப்பந்தம் ஏதேனும் காலஅவகாசம் கூறி போடப்பட்டதா என்றால் இல்லை. எதிரி நிறுவனம் எங்களுடன் சுமார் ரூ.10,00,000/– த்திற்கான வியாபார பரிவர்த்தனை ஏற்படுத்தி கொண்டார். இவ்வழக்கு காசோலையை எதிரியிடம் இருந்து நான் நேரடியாக வாங்கினேனா என்றால் எனது முதலாளியிடம் இரண்டு காசோலை கொடுத்தார். 04.01.2024 ரூ.2,00,000/– த்திற்கு ஒரு காசோலையும், 12.01.2024 ரூ.2,47,429/– க்கு ஒரு காசோலையும் எதிரி கொடுத்தார். 3ம் நபரிடம் கொடுத்த காசோலை குறித்து எனக்கு தெரியுமா மற்றும் அந்த 3ம் நபர் இரு நிறுவனத்திற்கு பொதுவான நபர் என்று எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு யாரும் இல்லை. காசோலை Accont closed என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது, எங்கள் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றதற்கு எதிரி கையெழுத்து செய்துள்ளார் அவர் கையெழுத்து எனக்கு பரிட்சையமா என்றால் பரிட்சையம். பாக்கி தொகைக்கு தான் இரு காசோலையும் தரப்பட்டது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K